Selvaraj Murali
India
Chairman - INFITT
(chair@infitt.org)

T.Thavaruban
Srilanka
Executive Director - INFITT
ed@infitt.org

**25.07.2017**

# ஊடக அறிக்கை

அமெரிக்க நாட்டில் பதிவு செய்யப்பட்ட, "உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்)" நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று தமிழ்த் தொழில் முனைவோர், தமிழ்க் கணினியாளர்கள், நிரலர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோரை ஒருங்கிணைக்க முனைவதாகும். இதன் உறுப்பினர்கள் இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ளனர். இந்நிறுவனத்தின் ஒரு முக்கிய நடவடிக்கை ஆண்டுதோறும் தமிழ் இணைய மாநாட்டை உலகெங்கிலும் பல நாடுகளில் தொடர்ந்து நடத்தி வருவதாகும்.

உலகத் தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றத்தின் (உத்தமம்) 16வது தமிழிணைய மாநாடு 2017, கனடாவில் தொராண்டோ (Toronto) மாநகரில், தொராண்டோ பல்கலைக்கழக சுகார்பரோ (Scarborough) வளாகத்தில் ஆகத்து மாதம் 25-27 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கு வாட்டர்லூ பல்கலைக்கழகத்தின் பாங்கு அறிதிறன் இயந்திர அறிவுத்திறனுக்கான நடுவத்தின் ஆதரவோடும், தொராண்டோ பல்கலைக்கழகம், சுகார்பரோவின் துணையோடும் நடைபெறுகின்றது. மாநாட்டுக்கருத்தரங்கில் ஆழ்தமிழின் அழகும் ஆழக்கற்றல் திறனும் (Deep Learning) என்பதும் தமிழில் தரவு அறிவியல் (Data Science)என்பதுமாக இரண்டு கருத்து முழக்கங்கள் வைக்கப்பட்டுள்ளன. உத்தமம் வருடாந்திர தமிழ் இணைய மாநாடு 2017 தொடர்பில் உத்தமம் செயலகத்தின் அனுமதியுடன் முடிவுகளை எடுக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் ஒருங்கிணைக்கவும் கனடாவில் மாநாட்டு நிகழ்ச்சிக் குழுத்தலைவர் பேராசிரியர் செ.இரா. செல்வக்குமார் அவர்களுக்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது

மாநாட்டு திகதிகளில் எந்தவித மாற்றமும் இல்லை வருகின்ற ஆகத்து 26 -27 திகதிகளில் கனடாவின் தொராண்டோ மாநகரத்தில் நடைபெறும். உத்தியோகபூர்வமாக மாநாட்டுக்காக அறிவிக்கப்பட்ட இணையத்தளம் www.tamilinternetconference.org ஆகும். அது தவிர வேறு தளங்கள் ஊடாக தகவல்களை பெறவோ பணப்பரிமாற்றம் செய்யவோ அனுமதிக்கப்படவில்லை . தமிழ் இணைய மாநாடு என்ற பெயரில் வேறு எந்த திகதிகளிலோ வேறு எந்த இடத்திலோ மாநாடுகள் நடாத்த எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. மாநாடு தொடர்பில் பயண ஏற்பாடுகள் பதிவுகள் கட்டுரை சமர்ப்பிப்பு செயற்பாடுகளை செய்வதற்கு **cpc2017@infitt.org** மற்றும் **ed@infitt.org** மின்னஞ்சல்களுடன் தொடர்பு கொள்ளவும்

செல்வராஜ் முரளி
தலைவர் , உத்தமம்

த.தவரூபன்
செயல் இயக்குனர், உத்தமம்

**EC Members**
Selva.Murali(India), Chairman
Thavaruban, (Srilanka), ED
E.IniyaNehru (India),
Suganthi Nadar (USA)
K. Kalyanasundaram (Switzerland)
Vasu Renganathan (USA)
S.Maniam ( Singapore)
Arul Veerappan(Treasurer)
C. M. Elantamil (Malaysia)
M. Saravanabavanthan (Srilanka)
Dr.Duraimanikandan (India)